<u>4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் திரு. **M.** நம்பிராஜன், பி.ஏ., பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**MCOP No. 7/2022** நாள்: **22.08.2025** ம.சா.**1** – ஜோதிகுமாரி

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை -</u>

விபத்தில் இறந்து போனது எனது கணவர் புஷ்பராஜ். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து யாருடைய அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்தானது உடுமலைபேட்டை நகராட்சிக்கு முன்பு கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி தளி ரோட்டில் வரும் போது விபத்து நடந்தது. விபத்து சமயத்தில் எனது கணவர் இரு சக்கர வாகனத்தை ஒட்டி கொண்டு செல்லவில்லை, நின்று கொண்டு தான் இருந்தார். நான் தாக்கல் செய்துள்ள சத்திய பிரமாண வாக்குமூலத்தில் எனது கணவர் இரு சக்கர வாகனத்தை ஒட்டிக்கொண்டு வந்ததாக தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்திற்கு அருகில் தளி – உடுமலை செல்லும் மேம்பாலம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி மேம்பாலத்தின் வழியாக தான் தளி, மூனாறு ஆகிய ஊர்களுக்கு செல்லும் வாகனங்கள் செல்லும் என்றால் சரிதான். எனது கணவர் வந்ததாக சொல்லப்படும் ரோடானது கிளை ரோடு, அதிலிருந்து மெயின் ரோட்டுக்கு செல்ல வேண்டும் என்றால் மெயின் ரோட்டில் வரும் வாகனத்தை கிளை ரோட்டில் வருபவர் பார்த்து தான் செல்ல வேண்டும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் எதிர்மனுதாரர் கவனமாக தான் வாகனத்தை ஓட்டி வந்தார் என்றும், எனது கணவர் தான் கிளை ரோட்டில் இருந்து கவனம் இல்லாமல் வாகனத்தை மெயின் ரோட்டுக்கு ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. எனது கணவரின் ஓட்டுநர் உரிமத்தை இந்த மனு விசாரணையில்

தாக்கல் செய்துள்ளேன். எனது கணவர் மோட்டார் வாகன சட்ட விதிகளை மீறி தலைக்கவசம் இல்லாமல் வாகனத்தை ஓட்டி வந்தார் என்றால் சரியல்ல. எனது கணவர் தலைக்கவசம் அணிந்து வாகனத்தை ஓட்டியிருந்தால் தலைக்காயம் ஏற்பட்டு இறந்திருக்க மாட்டார் என்றால் சரியல்ல. விபத்து எனது கணவரின் அஜாக்கிரதையால் தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்தை ஏற்படுத்தியதாக சொல்லப்படும் 1ம் எதிர்மனுதாரர் விபத்து சமயத்தில் மது அருந்தியிருந்ததால் அதாவது காப்பீடு நிபந்தனையை மீறியிருந்ததால், 3ம் எதிர்மனுதாரர் நிறுவனம் எங்களுக்கு இழப்பீடு செலுத்த கடமைபட்டவரல்ல என்றால் சரியல்ல. எனது கணவர் ஆவண எழுத்தரிடம் உதவியாளராக இருந்து மாதம் ரூ.50,000/- ஈட்டி வந்தார் என்பதை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது கணவர் ஆவண எழுத்தரிடம் உதவியாளராக தான் இருந்தார், ஆவண எழுத்தர் இல்லை என்றால் சரிதான். ஆவண எழுத்தரிடம் வேலை பார்த்தார் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

<u>4ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்க விசாரணை –</u>

விபத்து சமயத்தில் எனது கணவர் இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்தார் என்றால் சரிதான். எனது கணவர் ஓட்டி வந்த இரு சக்கர வாகனம் 4ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி காப்பீடு 3ம் நபர்களுக்காக மட்டும் செய்யப்பட்ட காப்பீடு ஆகும். எனது கணவர் ஓட்டி சென்ற வாகனத்திற்கு அவர் தான் உரிமையாளர். எனது கணவர் ஓட்டி சென்ற வாகனத்திற்கு 3 வது நபர் இல்லை என்பதால் 4ம் எதிர்மனுதாரர் இழப்பீடு செலுத்த கடமைபட்டவரல்ல என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தமாக 1ம் எதிர்மனுதாரர் மீது தான் முதல் தகவல் அறிக்கை, இறுதியறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து எனது கணவரின் அஜாக்கிரதையால் நடக்கவில்லை என்றால் சரிதான். 1 முதல் 3

எதிர்மனுதாரர்களிடம் தான் இழப்பீடை நான் கோர முடியும் என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/–M.Nambirajan.
4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.